1970 செப்டம்பர் 2]

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப் படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 7—9—1970 திங்கட்கிழமை காலே 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதாவை பேரவைமுன் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

6. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இம்மசோதாவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் அங்காடிகள் (திருத்தம்—தீர்வை செல்திறன் ஆக்குதல்) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் அங்காடிகள் (திருத்தம்—தீர்வை செல்திறன்) மசோதாவை பேரவைமுன் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் அங்காடிகள் (திருத்தம்—தீர்வை செல்திறன் ஆக்குதல்) மசோதா.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளை பொருள்கள் அங்காடிகள் (திருத்தம்—தீர்வை செல்திறன் ஆக்குதல்) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.